**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066931

1. District மாவட்டம் : பெரம்பலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 01 Date: நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: (Amendment 2018) ACT 1988 Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Criminal Procedure Code Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.07.2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.45 hrs Time to : நேரம் வரை 22.50 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019 Time நேரம் : 15.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் : —

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 13 KM. வடமேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் வேப்பந்தட்டை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. வெங்கடாசலம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராமசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 3, வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆட்சியர் (தேர்தல்) (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) ஜே. சுந்தரராமன், இளநிலை உதவியாளர், 2) வை. தேவி, தற்காலிக பணியாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேப்பந்தட்டை, 3) கி. செல்வகுமார், பத்திர எழுத்தர் தாமரையான் உதவியாளர் 4) கி. ரவி (செல்வகுமாரின் நண்பர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: இன்று 16.07.2019 ம் தேதி 15.00 மணியளவில் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் ப. சுலோச்சனா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு. இரா. வெங்கடாஜலம், தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர், துணை மாவட்ட ஆட்சியர் (தேர்தல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர். என்பவர் அலுவலகம் [illegible] கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு. இரா. வெங்கடாஜலம், தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர், துணை மாவட்ட ஆட்சியர் (தேர்தல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர், பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, பெரம்பலூர். ந.க. அ1/300/2019 நாள் 16.07.2019 ஐயா / அம்மையீர், பொருள்: பெரம்பலூர் மாவட்டம் - வேப்பந்தட்டை தாலுகா - சார்பதி -வாளர் அலுவலகம் - 15.07.2019 அன்று பெரம்பலூர் ஊழல் தடுப்பு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

16/07/2019
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. SULOCHANA
Rank: நிலை INSPECTOR No. எண் OF POLICE

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

Continuation of FIR in Cr.No.01/2019

மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது – மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக....

பார்வை: திடீர் ஆய்வு செயல்முறைகள் நாள்:15.07.2019. பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் 15.07.2019-ம் தேதி மாலை பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திருமதி.ப.சுலோச்சனா மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலூகா, வேப்பந்தட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கண்காணித்து பின்பு திரு.சு.பாலு, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி அலுவலகத்தை மாலை 18.45 மணி முதல் 22.50 மணி வரை திடீர் ஆய்வு செய்ததில் மேற்படி அலுவலக அலுவலர்கள் மற்றும் பத்திர எழுத்தரின் உதவியாளர் ஆகியோர் கணக்கு கூற இயலாமல் வைத்திருந்த கையூட்டு தொகையாக கருத கூடிய ரூ.1,12,700 கைப்பற்றப்பட்டு திடீர் ஆய்வு செயல்முறைகள் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணிணி மூலம் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை தாலுக்கா, வேப்பந்தட்டையில் பெரம்பலூர் ஆத்தூர் சாலையின் மேல்புறம் உள்ள சார்பதிவாளர் அலுவலத்திற்கு பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தாங்களும் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாக பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 15.07.2019 மாலை 18.45 மணியளவில் திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் உத்தரவின் பேரில் திரு.இரா.வெங்கடாஜலம், த/பெ இராமசாமி, துணை வட்டாட்சியர் (தேர்தல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் மற்றும் பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆய்வாளர் திருமதி.ப.சுலோச்சனா மற்றும் அலுவலர்கள் உதவியுடன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வேப்பந்தட்டை சார்பதிவாளர் அலுவலகமானது வேப்பந்தட்டை பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் தெற்கில் அமைந்துள்ளது. அலுவலகத்தின் கிழக்கில் பெரம்பலூர் - ஆத்தூர் சாலை தெற்கு வடக்காக செல்கிறது. மேற்படி அலுவலகத்தின் வாயில் கிழக்கு நோக்கியும் அதற்கு தெற்கில் சுமார் 20 மீட்டர் தொலைவில் பத்திர எழுத்தர் கடை உள்ளிட்ட மொத்தம் 8 கடைகள் வடக்கு பார்த்து உள்ளன. அதில் முதல் கடை மூடப்பட்டும் இரண்டாவது கடை தாதாமியான் என்ற பத்திர எழுத்தர் கடையும், மற்ற அனைத்து

கடைகள் மூடப்பட்டும் இருந்தது. அலுவலக நுழைவுவாயில் மேற்கில் பார்வையாளர்கள் அமரும் இடம் கண்காணிப்புப் கேமரா பொருத்தப்பட்டும் அதற்கும் தெற்கில் அறை பிரிக்கப்பட்டு கிழக்கில் கணினி அறையும் அதில் தெற்கில் இருந்து வடக்காக முறையே டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.மோ.லோகேஸ்வரி, கேமரா ஆபரேட்டர் திரு.மு.சரவணன், தற்காலிக பணியாளர் திருமதி.வை.தேவி இருக்கைகள் உள்ளது. கணினி அறைக்கு மேற்கில் முறையே கிழக்கு மேற்காக திரு.இரா.தினேஷ் அலுவலக உதவியாளர், திரு.சு.பாலு, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), திருமதி.கே.சுந்தராம்பாள், இளநிலை உதவியாளர் இருக்கை உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு வடக்கில் பதிவேடுகள் அறையும் அதன் வாயிலில் கேமரா பொருத்தப்பட்டும் அதற்கு மேற்கில் கழிவறைகளும் உள்ளது. சார்பதிவாளர் அறைக்கு தெற்கில் சாப்பாட்டு அறையும் பதிவேடுகள் அறையும் ஒன்றாக உள்ளது. அலுவலகத்தின் வாயிலுக்கு அருகில் ஏர்டெல் டவர் ஒன்று உள்ளது. மேற்படி அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்த போது திரு.சு.பாலு, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), திருமதி.கே.சுந்தராம்பாள் இளநிலை உதவியாளர் மற்றும் திரு.இரா.தினேஷ், அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தர பணியாளர்களும் தற்காலிக பணியாளர்களான டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.மோ.லோகேஸ்வரி, கேமரா ஆபரேட்டர் திரு.மு.சரவணன், திருமதி.வை.தேவி ஆகியோர் இருந்தனர். மேலும் எலக்ட்ரீசியன் திரு.பெரியசாமி இருந்தார். மேற்படி அனைவருக்கும் திடீர் ஆய்வு செய்த நோக்கத்தை தெரியபடுத்தி விஜிலென்ஸ் குழுவினருடன் விசாரித்து சோதனை செய்ய கீழ்காணும் நபர்கள் கீழ்கண்டவாறு பணம் வைத்து இருந்தனர். சரியான முகாந்திரம் கூறிய தொகை திரும்ப அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாதவர்களிடம் இருந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேல்நடவடிக்கைக்காக ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1. | கே.சுந்தராம்பாள், இளநிலை உதவியாளர் | 150.00 | 3720.00 |
| 2. | இரா.தினேஷ், அலுவலக உதவியாளர் | 180.00 | - |
| 3. | மு.சரவணன், கேமரா ஆபரேட்டர் | 250.00 | - |
| 4 | வை.தேவி, தற்காலிக பணியாளர் | - | 200.00 |
| 5. | திரு.சிவக்குமார், பத்திர எழுத்தர் திரு.தாதாமியான் உதவியாளர். | - | 1,02,600.00 |
| 6. | திரு.ரவி, (சிவக்குமாரின் நண்பர்) | - | 6,180.00 |
| | மொத்தம் | 580.00 | 1,12,700.00 |

மேற்படி வை.தேவி, தற்காலிக பணியாளர் பணக்கையிருப்பு பதிவேட்டில் பதியாமல் வைத்திருந்த ரூபாய் இருநூறு மற்றும் கே.சுந்தராம்பாள், இளநிலை உதவியாளர் கணக்கு கூற முடியாமல் வைத்திருந்த பணம் ரூபாய்.470 மற்றும் தேவி பத்திர பதிவிற்கு வந்தவர்களிடம் கொடி நாள் பணம் ரூ.3,250/- என்று வசூல் செய்து சரியான கணக்கில்லாமல் கே.சுந்தராம்பாளிடம் கொடுத்து அதனை அவர் பாதுகாப்பு லாக்கரில் வைத்து இருந்ததை அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. தாதாமியான் என்ற பத்திர எழுத்தரின் உதவியாளர் திரு.சிவக்குமார் என்பவர் தாதாமியான் கடையின் வாயிலுக்கு வெளியே சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகில் தனது நண்பர் ரவியுடன் நின்று இருந்தவரை விசாரிக்க அவர் வைத்திருந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாத காரணத்தால் அவரிடம் இருந்த பணம் ரூ.1,02,600/- (ஓரு லட்சத்து இரண்டாயிரத்து அறநூறு ரூபாய் மட்டும்) கைப்பற்றப்பட்டது. அவரது நண்பர் திரு.ரவி சரியான முகாந்திரம் கூறாமல் வைத்திருந்த பணம் ரூ.6,180/- (ரூபாய் ஆறாயிரத்து நூற்று எண்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் நிரந்தர பணியாளர்களின் வருகை பதிவேடு, பணியாளர்கள் கையிருப்பு தொகை பதிவேடு, கொடி நாள் வசூல் ரசீது புத்தகம் ஆகிய ஆவணங்கள் திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 22.50 மணிக்கு முடிக்கப்பட்டது. அரசு ஊழியர்கள், பத்திர எழுத்தரின் உதவியாளர் தகுந்த முகாந்திரம் கூற முடியாமல் வைத்திருந்த பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ரூ.1,12,700 கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் 15.07.2019-ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் பணம் ரூ.1,12,700/-ஐ தங்களிடம் ஓப்புவிக்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம) திரு.இரா.வெங்கடாஜலம், தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர், துணை வட்டாட்சியர் (தேர்தல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர். இணைப்பு: 1. திடீர் ஆய்வு செயல்முறைகள் நாள்:15.07.2019 2. ரொக்கம் ரூ.1,12,700/- மற்றும் திடீர் ஆய்வு செயல்முறைகளில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள்.

ஐயா இன்று மேற்படி புகார் மனு தொடர்பாக சட்டகருத்துரை பெற்று பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 01/2019 u/s 7 of Prevention of Corruption Act (Amendment 2018) 1988 r/w 102 Cr.P.C ன் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன்.

16/07/19

(ப.சுலோச்சனா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
பெரம்பலூர்.